IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# போகிறவழிநாவல்காட்டும்மதமாற்ற மும்மதக்கலவரங்களும்

**லூ.ஜினிஷா**
பதிவுஎண்2023PHDFTTM05,
முனைவர்பட்டஆய்வாளர்( முழுநேரம்),
தமிழ்மொழிமற்றும்மொழிபெயர்ப்பியல்துறை,
திராவிடப்பல்கலைக்கழகம்,சீனிவாசவனம்
குப்பம் - 517426ஆந்திரப்பிரதேசம், இந்தியா.
ORCID: https:// orcid.org/ 0009 - 0002 – 9012 - 1174
**முனைவர்பூ.சு.கணேஷ்மூர்த்தி**
உதவிப்பேராசிரியர், தமிழ்மொழிமற்றும்மொழிபெயர்ப்பியல்துறை,
திராவிடப்பல்கலைக்கழகம், சீனிவாசவனம்
குப்பம் - 517426ஆந்திரப்பிரதேசம், இந்தியா.
ORCID: https:// orcid.org/0000-0003-3734-2402
[09:15, 4/27/2024] Jinitha Kanyakumari:

**ஆய்வுச்சுருக்கம்**

கன்னியாகுமரிமாவட்டத்தில்1956

க்குபிறகுநடந்தமதமாற்றங்கள்மற்றும்அம்மதம்அச்சத்தால்நிகழ்ந்தமதக்கலவரங்கள்குறித்துபோகிறவழிஎன்னும்நாவலில்முகிலைராசபாண்டியன்அவர்கள்பதிவுசெய்துள்ளார்.

அனைவரும்ஒரேகுடும்பமாகஒற்றுமையுடன்வாழ்ந்தகுமரிமாவட்டத்தில்மதக்கலவரம்அரங்கேறியிருப்பதுஅனைவரையும்ஆச்சரியத்துக்குஉள்ளாக்கும்அரியசெய்தியாகும்.

மதத்திற்குமனிதனதுஉணர்வுகளைமாற்றிஅமைக்கும்சக்திஉண்டுஎன்பதைகுமரி மாவட்டத்தில்நடைபெற்றமதக்கலவரத்தின்மூலமாகஅறியமுடிகிறது.

மனிதன்நல்லறங்கள்செய்துநல்லபண்புகளைப்பெற்றுஇவ்வுலகில்வாழவேண்டும்என்றுமனிதனைச்செம்மைப்படுத்திநல்லொழுக்கங்களைபோதிப்பதுமதம்.

ஆனால்அம்மதங்களினாலேளேமக்களுக்கிடையில்பிரிவினைகளும்பிளவுகளும் உருவாக்கிமனிதன்மிருகமாகமாறிமதக்கலவரம்நிகழ்த்திசமூகஒற்றுமையுடன் வாழ்ந்தகுமரிமண்ணினைகலவரபூமியாகமாற்றியசிற்றறிவுபடைத்தவர்களின்எண்ணங்களையும்அவர்களால்பாதிக்கப்பட்டமனிதர்களின்மனப்பங்கினையும் போகிறவழிஎன்னும்நாவல்படம்பிடித்துக்காட்டியுள்ளது.

இந்நாவல்காட்டியமதக்கலவரத்தினைஇவ்வாய்வுக்கட்டுரைபதிவுசெய்கிறது.

**முன்னுரை**

இன்றையஉலகுபலமதங்கள், பண்பாடுகள், மொழிகள், இனங்கள்எனபிரிந்திருக்கும்பன்மைநிலமாகும். கன்னியாகுமரிமாவட்டமானதுதிருவிதாங்கூர்சமஸ்தானத்தில்இருந்துபிரிந்துதமிழ்நாட்டைசேர்ந்தஒருமாவட்டமாகவிளங்கியகாலத்தில் 1956வது ஆண்டிற்குபிறகுநிகழ்ந்தமதமாற்றங்கள்மற்றும்குடும்பஅமைப்பில்எழுந்தசிக்கல்கள்பற்றியகருத்துக்களையும்போகிறவழிஎன்னும்நாவலில்முகிலைஇராசபாண்டியன்அவர்கள்பதிவுசெய்துள்ளார். அம்மதக்கலவரங்களின்கொடூரதாக்குதல்களைஇவ்வாய்வுக்கட்டுரைபதிவுசெய்கிறது.

**மதமாற்றம்**

ஒருமதத்திலிருந்துமற்றொருமதத்திற்குசென்றஒரேகாரணத்திற்காகமக்கள்பல் வேறுவகைகளில்துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.போகிறவழிஎன்னும்நாவலில்ஒரேகுடும்பத்தைசேர்ந்தசகோதரர்களில்ஒருவர்தனதுகுடும்பத்தோடுபூர்வீகம்மதத்தைவிடுத்துமற்றொருமதத்தில்சேர்ந்துவிடுகிறார். உடனேயேஅவர்கள்மற்றவர்களுக்குபகைவர்களாகிப்போகிறார்கள். தனியாகவாழ்கின்றகுடும்பங்களைகிடையேவிருப்பம்விரோதங்களும்ஏற்பட்டுசண்டைகளும்தாக்குதல்களும்நடைபெறுகின்றன.

மதம்மாறியதால்உறவுகள்மாறிவிடுவதையும்அமைதியாகஇருந்தகுடும்பங்களில் போட்டியும்பொறாமையும்தாக்குதல்களும்ஏற்படுகின்றன. இந்துமதத்திலிருந்துகிறிஸ்தவமதத்திற்குமாறியஒரேகாரணத்தால்பிறப்புமுதல்உடன்பயணித்துவரும்உறவுகள்திடீரென்றுபகைவர்களாகமாறிதங்களையேதாக்கும்அவலநிலையைஆசிரியர்இந்நாளில்பதிவுசெய்கிறார்.

“ அவங்ககூடநீங்கசண்டையா?

ஆமாநாங்கவேதகாரங்களாயிட்டோம்லியாஅதனாலஅவங்களங்ககிட்டபேசமாட்டாங்க”

நலம்சரியில்லாதவரைநலம்விசாரிப்பதற்குகூடமதம்தடையாகஇருக்கும்அவலம் அரங்கேறியகாலத்தில் “ தங்கத்துரைஅண்ணன்எப்படிஇருக்காங்கஎன்றுகேட்பதற்குமார்டினுக்குஆசைதான். கேட்டால்பிலோமினாவுக்குசொல்லலாம்என்ஆசையும்இருந்தது. ஆனால்முத்தையாவிடம்கேட்பதற்குபயம். கிறிஸ்தவர்களைக்கண்டாலேஅவருக்குப்பிடிக்காது. சின்னையாவாகஇருந்தமார்ட்டினின்அப்பாஇசுரவேலாகமாறிவிட்டதால்அவருடன்பேசுவதையேநிறுத்திவிட்டார். சொந்ததம்பிஎன்றும்பார்க்காமல்ஒருகிறிஸ்துமஸ்சமயத்தில்அடிக்கப்போய்விட்டார்”( போகிறவழிபக்கம் 51)

**மதமாற்றத்தால்நிகழ்ந்தகலவரங்கள்**

மதம்மாறியஒரேகாரணத்தால்பலகாயங்களும்கலவரங்களும்கொலைகளும்அக்காலகட்டத்தில்நிகழ்ந்திருக்கின்றன. நாவலின்துவக்கத்தில்சின்னத்தாயிஎன்பவர்என்பவர்மதம்மாறியதால்அவரதுகணவன்ஆலயத்திற்குள்சென்றுபலதாக்குதல்களைநிகழ்த்தினார். அதிலிருந்துஇந்துக்களும்கிறிஸ்தவர்களும்மாறிமாறிஎதிர்க்கத்தொடங்கினர். அதில்துரைக்கண்ணுஎன்பவரின்கால்வெட்டுபட்டதோடுஉடல்முழுவதும்பலகாயங்கள்ஏற்பட்டது. “ ஏண்டாசாதிகெட்டநாயேஎனக்கபொண்டாட்டியாவேதக்கோயிலுக்குகூட்டிட்டுவந்தே” என கூறுவதை அறியலாம்த( போகிறவழிபக்கம் 25)

இந்துசமயத்தைசார்ந்தவர்கள்கிறிஸ்தவஆலயத்திற்குதீவைத்துவிட்டுகோயில்குட்டியையும்கொன்றுவிட்டனர். "

பெரியஉருவமானமாணிக்கத்தின்கனத்தைகோயில்குட்டியால்தாங்கமுடியவில்லை. அங்கும்இங்கும்அவனால்அசையமுடியவில்லை.

உடனேஅவனதுவாயையும்மூக்கையும்சேர்த்துஇறக்கிபோத்தினாள்தங்கையாபந்தத்தைகொளுத்திஅந்ததேவாலயத்தைஒட்டிஇருந்தஓலைபந்தலில்போட்டான்துரைக்கண்ணு.

அதுபற்றிக்கொள்வதற்குமுன்பாகபக்கவாட்டில்இருந்தஏணியில்ஏறிஊசிகோபுரத்தின்உச்சிக்குப்போனான்பால்சாமி.

கையில்இருந்தமண்ணெண்ணையைசிலுவையின்மீதுஊற்றினான்.

வேகமாகஅவன்கீழேஇறங்குவதற்குள்பந்தல்தீப்பற்றிஎரிந்தது.

சர்ச்சின்ஊசிக்கோபுரத்தில்நெருப்புகுபு.... குபுவென்றுபற்றிஎரிந்தது.

ஓடுகளைத்தாங்கியிருந்தமரச்சட்டத்தில்அடிக்கப்பட்டிருந்தஆணிகள்வெடித்துச்சிதறின"( போகிறவழிபக்கம் 86).

**வேணுகோபால்கமிஷனின்வார்த்தைகள்**

குமரிமாவட்டத்தில்மதத்தின்பெயரால்மக்கள்எவ்வகையானதுன்பங்களைஅனுபவித்தனர்என்றுமனிதம்பட்டபாட்டினைபுலனாய்வுசெய்யதமிழகஅரசால்நியமிக்கப்பட்டவேணுகோபால்கமிஷன்சிறப்பானஓர்அறிக்கையைவெளியிட்டுள்ளது."இம்மாவட்டத்திலுள்ளநூதனநிலையாதெனில்ஒருகுடும்பத்தில்தந்தைகிறிஸ்தவராகவும்மகன்கிறிஸ்தவராகவும்மகள்கிறிஸ்தவராகவும்ஆனால்அவரதுகணவர்இருப்பார்கள். எனவேமதத்தைமுன்னிட்டுசச்சரவுகள்என்பதுநடக்காதஒன்று"

ஆனால்நடக்காததுநடந்தது. குமரிமாவட்டம்முழுவதும்பகையில்கொதித்தது.

விதவைகளாக்கப்பட்டோர்குமுறிஅழுதனர். சமூகங்கள்சாய்ந்துவிழுந்தன.

இச்சம்பவங்களுக்குஇணையாகவேறுஎந்தஒருமாநிலத்திலும்எந்தஒருபகுதியிலுமேஅந்தஅளவுக்குநடைபெறவில்லை.

இருதரப்பிலும்உள்ளவகுப்புவாதிகள்கிளறியமனக்கசப்பு, குரோதஉணர்வு, சினம், பகைமைஉணர்வுகள்அனைத்தும்கட்டவிழ்த்துவிடப்பட்டுமுழுமூச்சில்கூத்தாடின.

பட்டப்பகலிலேஆயுதம்தாக்கும்நிகழ்ச்சிகள்நடந்தன.

திட்டமிட்டுத்திரட்டப்பட்டகும்பல்கள்ஆயுதங்களைத்தாங்கியும்நாட்டுவெடிகுண்டு

களையும்துப்பாக்கிகளையும்எடுத்துக்கொண்டுசீறிப்பாய்ந்துசென்றன. தீயிடல்கொள்ளைத்தலைவிரித்தாடின. பள்ளம்துறை, ஈத்தாமொழிஆகியஇடங்களிலும்காட்டுமிராண்டித்தனமும்கோரத்தன்மையுமே ஆட்சிபுரிந்தன. வீடுகள், கடைகள், துணிக்கடைகள், தட்டச்சுபயிலகம், தென்னந்தோப்புகள், வாழைத்தோட்டங்கள்போன்றசொத்துக்களைநாசப்படுத்தியதுஇரக்கமற்றமனித த்தன்மையற்றசெயலாகும். கல்விநிறுவனங்கள், கன்னியர்மடங்கள், கான்வன்ட்பள்ளிகள், தேவாலயங்கள், கோயில்கள்போன்றவையும்தாக்கப்பட்டன. இதில்வருந்தத்தக்கதும்மிகவும்துயரபடக்கூடியதும்என்னவென்றால்இவைஅனை த்தும்சமயத்தின்பெயரால்நடந்துள்ளன.

(குமரிக்கிறிஸ்தவர்களின்பயணப்பாதைபக்கம் 171,172)

**மக்களிடையேநிலவும்மதவெறி**

மனிதர்கள்அனைவரும்சமநிலையுடன்அமைதியானவாழ்க்கைவாழவேண்டும்எ ன்பதுதான்பொதுவானகுறிக்கோள். ஆனால்மனிதர்கள்அமைதியுடன்ஆனந்தமாய்வாழமுடிவதில்லை. அவ்விதம்வாழ்வதற்குவழிகாட்டகூடும்என்றநோக்குடன்அமைக்கப்பட்டவைமதங் கள். அவ்வாறாகஉருவாக்கப்பட்டமதங்களேமக்களிடையேபேதங்கள், பிணக்குகள், பகைமை, போராட்டம், கலவரம், வன்முறைச்செயல்கள்போன்றவற்றைவளர்க்கும்வகையில்உருவெடுத்திருப்பதற் குமனிதர்களதுமனமும்உணர்ச்சிகளும்தான்அடிப்படைக்காரணம்.மதம்மாறுவ தால்உறவுகள்மாறிவிடுவதையும்மகிழ்ச்சியுடன்வாழ்ந்தகுடும்பஉறவுகளுக்குள் போட்டியும்பொறாமையும்தாக்குதலும்நிகழும்சமூகஅவலங்கள்இன்றையகாலக ட்டத்திலும்நிறைவேறிக்கொண்டுதான்இருக்கின்றன. மதங்களின்பெயரால்மக்கள்ஒருவரைஒருவர்பகைத்துக்கொண்டுதங்களுக்குளே யேபாகுபாடற்றசமூகஅமைப்பினைஉருவாக்கிக்கொள்கின்றனர்.

மதம்ஒருசமூகநிறுவனமாக, மக்களைஒன்றிணைப்பதிலும், அவர்களின்ஒற்றுமைஉணர்வுமேம்படுத்துவதிலும்முக்கியபங்குவகிக்கிறது. ஆனால்மக்கள்அதனைவேறுகோணத்தில்சித்தரித்துதான்சார்ந்திருக்கும்சமயம்ம

ட்டும்தான்உயர்ந்ததுஎன்றதவறானகண்ணோட்டத்தில்பிறசமயமக்களைஎதிரிக ளாகப்பார்க்கும்முரண்பாட்டுநிலையைஅவர்களேஉருவாக்கியிருக்கின்றனர்.

**சமூகவிடுதலைக்கானஇயக்கம்**

குமரிமாவட்டத்தில்புதியநற்செய்திவேகமாகபரவியபோதுசாமிதோப்புக்காரர்மு த்துக்குட்டிசாமிஎன்பவர்நாடார்களின்மதத்தலைவராகத்தம்மைஅறிமுகப்படுத்தி மதம்மாறாமல்சமூகவிடுதலைக்கானஇயக்கத்தைஉருவாக்கினார். இவரே ‘வைகுண்டராய்’அறியப்பட்டார்.
நாடார்கள்இடுப்பில்கட்டியிருந்ததுண்டைதலையில்கட்டுமாறுகட்டளையிட்டார்.
கிறிஸ்தவத்தின்வேகம்ஓரளவுதணிந்ததாகக்கூறலாம்.
ஆனால்இவர்பணிதொடங்குவதற்குமுன்னரேகிறிஸ்தவம்அகஸ்தீஸ்வரம், கல்குளம், வில்லவங்கோடுதாலுகாக்களில்பெரும்பான்மைபெற்றுவிட்டது.
தோவாளைவெள்ளாளர்களின்கோட்டைஅங்கும்கிறிஸ்தவத்தைத்தழுவினர்.

**மதம்மாறியகிறிஸ்தவர்களின்நிலை**

சாதியகட்டமைப்பின்பிடியிலிருந்துதம்மைவிடுவித்துக்கொள்ளகிறிஸ்தவமதம்த ழுவியமக்கள்மதம்மாறிபுதியவெளிச்சத்துக்குள்பிரவேசித்துவிட்டதாகச்சொல்லி க்கொண்டார்களேதவிரமுழுமையானஇருள்அவர்களைவிட்டுவிலகவில்லை.

**முடிவுரை**

இன்றுஒவ்வொருதனிமனிதனும்ஏதேனும்ஒருமதத்தின், சமூகத்தின், பண்பாட்டின், மொழியின், தேசத்தின்உறுப்பினராகவேஇருக்கிறான்.
சிலரதுமதம்அவர்களதுகுருதியில்கெட்டியாககலந்துவிட்டதாகவேஇருக்கிறது.மத மாற்றம், மதக்கலவரம்,
மதத்தின்பெயரால்மக்கள்கொண்டுள்ளநம்பிக்கைபோன்றவைஅளந்தறியமுடி யாததாகும்.
மதம்என்னும்அமைப்பானதுமக்களைவேறுபடுத்தும்பாங்கும்ஒரேசமூகத்தில்வா ழும்மக்களாய்இருப்பினும்மதம்மாறியகாரணத்திற்காகஅவர்களைஒதுக்கிவைத் திருக்கும்நிலையும்அவர்களைப்பகைவர்களாகபார்க்கும்நிலைஇன்றையகாலகட் டத்திலும்சிலசமுதாயங்களில்பின்பற்றப்பட்டுவருவதுவருந்தத்தக்கசெயலாகும்.

**பயன்பட்டநூல்கள்**

முகிலைஇராசபாண்டியன் - போகிறவழி

B.R. மகாதேவன் - இந்துமதம்நேற்றுஇன்றுநாளை

மறைமலையடிகள்தமிழர்மதம்

ஐசக்அருமைராஜன்தமிழ்நாவல்களில்சமுதாயமாற்றம்

சே.ரோ.நற்றீசன்குமரிக்கிறிஸ்தவர்களின்பயணப்பாதை